## PRESS NOTE

## AWPS INSPECTOR OF POLICE ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE BRIBE FOR CLOSING TRESSPASS CASE

The petitioner and her husband are living separately due to misunderstanding. Each of them were having separate keys for the house. The complainant had opened the house with her key and took her belongings for which a tresspass complaint was filed against her at Rajamangalam Police station, Chennai in 2021. The case was investigated and closed as mistake of fact. The complainants mother in law had approached the Hon'ble High Court which had instructed to re investigate this case along with another dowry harassment case registered at Villivakkam Police Station connected to the complainant. For closing the case in favour of the complainant, Tmt.Anuradha, Inspector of Police, AWPS Villivakkam had demanded Rs.20,000/- from the complainant and harassed her. Hence not willing to give bribe the complainant approached Vigilance and Anti-Corruption and preferred a complaint. In this connection a case was registered and trap was organized today. During the trap Mrs.Anuradha, Inspector of Police reiterated her demand and received the bribe amount of Rs.20,000/- from the complainant. The accused was arrested.

<u>பத்திரிக்கை குறிப்பு</u>

<u>வழக்கை முடித்து வைப்பதற்காக லஞ்சம் கேட்ட அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் கைது</u>

புகார்தாரரும் அவரது கணவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்கின்றனர். அவர்கள் தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தனர், அந்த வீட்டின் சாவி இருவரிடமும் உள்ளது, இந்நிலையில் புகார்தாரர் தன்னிடமிருந்த சாவியால் வீட்டை திறந்து தனது உடைமைகளை எடுத்துச் சென்றுள்ளார். இதையறிந்த புகார்தாரரின் கணவர் வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக கூறி அவர் மீது ராஜமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் அதனை விசாரணை செய்த ராஜமங்கலம் காவல் ஆய்வாளர் உண்மைக்கு புறம்பான வழக்காக கருதி இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. இதன் மீது புகார்தாரரின் மாமியார் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் பேரில் வில்லிவாக்கத்தில் புகார்தாரர் பதிவு செய்யப்பட்ட மற்றொரு வரதட்சணை வழக்குடன் இந்த அத்துமீறல் வழக்கையும் மறு விசாரணை செய்ய உத்தரவிட்டது. இந்த அத்துமீறல் வழக்கை முடித்து வைப்பதற்காக திருமதி.அனுராதா, மகளிர் காவல் ஆய்வாளர், வில்லிவாக்கம், அவர்கள் ரூ.20,000/- லஞ்சம் கேட்டதாக புகார்தாரர் மனு அளித்தார். இப்புகார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 19.10.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.அனுராதா, மகளிர் காவல் ஆய்வாளர், வில்லிவாக்கம, சென்னை, அவர்கள் புகார்தாரரிடமிருந்து ரூ.20,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.